[திரு. சோ. அழகர்சாமி [1979 மார்ச் 7]

உயர்மட்டக் குழு உறுப்பினர்களுடன் பேசும்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களும் மற்ற அமைச்சர்களும் வாக்குறுதி அளித்திருக்கிறார்கள். அப்போது உயர் மட்டக் குழுவினுடைய அறிக்கை வரும் வரையில் எந்தவிதமான இடையூறும் விவசாயிகளுக்கு அளிக்க மாட்டோம் என்று சொல்லி, ஒரு முடிவு செய்திருக்கிறார்கள். இன்றைக்கு அதற்கு விரோதமாக மின்சாரத் துண்டிப்பு, ஜப்தி நடவடிக்கை, கெடுபிடி வசூல் போன்ற நடவடிக்கைகளில் அரசாங்கம் ஈடுபட்டிருக்கிறது. நூற்றுக் கணக்கான போலீசாரை ஏவிவிட்டு, விவசாயிகளுக்கு பெருத்த இடையூறு செய்து கொண்டிருக்கிறார்கள். அங்கே ஒரு பெரிய பயங்கரமான போர் நடைபெறுவதைப்போல அவர்களுடைய நடவடிக்கை இருக்கிறது. உயர்மட்டக் குழுவுக்கு அளித்த வாக்குறுதிக்கு விரோதமாக அரசாங்கம் நடந்து கொள்கிற இந்த நிலை விவசாயிகளிடையே ஒரு பதட்ட நிலையை தோற்றுவித்து, நூற்றுக்கணக்கான போலீசாரை விவசாயிகளுக்கு எதிராக ஏவிவிட்டு, அவர்களுடைய உற்பத்தியை அழிக்கக்கூடிய நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, இப்படிப்பட்ட சம்பவங்களைப் பற்றியெல்லாம் விவாதிக்க இந்த அவையை குறைந்த பட்சம் ஒரு மணி நேரமாவது ஒத்திவைத்து விவாதிப்போம். அப்போது ஆளும் கட்சி உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக் களைச் சொல்லட்டும். எதிர்க் கட்சிகளைச் சேர்ந்த உறுப்பினர்களும் தங்களுடைய கருத்துக் களைச் சொல்லட்டும். எல்லா தரப்பினரும் தங்களுடைய கருத்துக்களைச் சொல்லி, ஒரு நல்ல முடிவை எடுப்பதற்கு இந்த அவையின் இதர அலுவல்களை ஒரு மணி நேரத்திற்காவது ஒத்திவைக்க வேண்டும், இந்தப் பிரச்சினை பற்றி விவாதிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

4. ஒழுங்குப் பிரச்சினை.

சட்டமன்ற மேலவை உறுப்பினர்கள் அமரும் மாடம் மூடப்பட்டிருப்பது குறித்து.

திரு. நா. சுந்தரராஜ் : சார், பாயிண்ட் ஆப் ஆர்டர். இன்றைய தினம் பார்வையாளர்கள் யாரும் அனுமதிக்கப்படவில்லை. பார்வையாளர்களை அனுமதிக்காவிட்டாலும் சட்டமன்ற மேலவை உறுப்பினர்கள் அமரும் மாடம் கூட மூடப்பட்டிருக்கிறது. அது அவர்களுடைய உரிமையை பறிப்பதாக இருக்கிறது. ஆகையால் இது மிகவும் வருந்தத்தக்க ஒரு செயல். சட்டமன்ற மேலவை உறுப்பினர்கள் எல்லாம் லாபியிலே உட்கார்ந்துகொண்டிருக்கிறார்கள். அவர்கள் உட்கார்ந்து பார்க்கக்கூடிய மாடமாவது திறந்துவிடப்படுமா ?

1979 மார்ச் 7]

திரு. துரை முருகன் : சார், பாயிண்ட் ஆப் ஆர்டர். எம். எல். சி.-கள் உட்காரக்கூடிய இடங்களைக்கூட பூட்டைப் போட்டுப் பூட்டி வைத்திருக்கிறார்கள். பார்வையாளர்களை நீங்கள் அனுமதிக்கவில்லை. அது உங்களுடைய வசதியைப் பொறுத்தது. ஆனால் எம். எல். சி.-க்கள் கூடவா பார்க்கக் கூடாது. அவர்கள் மீது உங்களுக்கு நம்பிக்கை இல்லையா? அவர்கள் எல்லாம் லாபியிலே உட்கார்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் மீதுமா உங்களுக்கு சந்தேகம்?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் ஏற்கனவே சொன்னேன். சூழ்நிலைக் கேற்ப பேரவைத் தலைவர் செய் திருக்கிறார். அதுபற்றி பின்னர் பரிசீலனை செய்யப்படும். சட்டமன்ற மேலவை உறுப்பினர்கள் உட்காரும் இடங்களை பூட்டி வைக்கக் கூடாது. அந்த அறைகளை இப்போது திறந்து விடச் சொல்கிறேன். மற்றவை பின்னர் பரிசீலிக்கப்படும்.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: சார். பாயிண்ட் ஆப் ஆர்டர், நேற்று திராவிட முன்னேற்றக் கழகத்தின் சட்டமன்ற மேலவைத் தலைவர்—சட்டமன்ற மேலவை எதிர்க்கட்சித் தலைவர் திரு. சங்கரலிங்கம் அவர்கள் இந்த அவையின் நிகழ்ச்சிகளை பார்வையிடுவதற்கு வந்தபோது வெளியே தடுத்து நிறுத்தி யிருக்கிறார்கள். அரை மணி நேரத்திற்கு மேலாக வெளியே நின்றிருக்கிறார். இதுபோன்ற சம்பவம் நடப்பது சரியா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதைப்பற்றி மேலவையில் பேசிக் கொள்வார்கள்.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : நம்முடைய அவைக்கு— அவை நிகழ்ச்சிகளைப் பார்வையிடுவதற்கு வரும்போது இங்கே தடுக்கப்பட்டிருக்கிறார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்போது திறந்துவிடச் சொல்லியிருக்கிறேன்.

(3) ஒத்திவைப்புத் தீர்மானங்கள்—தொடர்ச்சி.

(அ) மின்கட்டண பாக்கிக்காக மின் இணைப்பு துண்டிக்கப் பெறுவது குறித்து—தொடர்ச்சி

திரு. எம். ஏ. லத்தீப் : பேரவைத் தலைவரவர்களே, தான் உழைத்து தன்னுடைய உழைப்பை, வருவாயை இந்த உலகுக்குத் தந்து, உலகம் உய்ய வழி செய்கின்ற விவசாயிகள் பிரச்சினை இது. மிக ஆபத்தான ஒரு துறையிலே இன்றைக்கு அரசு இந்த நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறது. It is a very sensitive spot.